| Headline | 170 students affected of HIV | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 06 Sep 2013 | Color | Full Color |
| Section | News | Circulation | 45,000 |
| Page No | 1,14 | Readership | 124,000 |
| Language | Tamil | ArticleSize | 309 cm² |
| Journalist | N/A | AdValue | RM 1,423 |
| Frequency | Daily | PR Value | RM 4,270 |



எச்ஜவியினால்

# 170 மாணவர்கள் பாதிப்பு!

கோலாலம்பூர், செப். 6-

20க்கும் 39 வயதுக்கும் உட்பட்ட மலேசிய மாணவர்கள் கடந்த 5 ஆண்டுகளில் எச்ஜவி கிருமியால் பாதிப்புக்குள்ளானதாக அறிக்கை ஒன்று கூறுகின்றது. பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் மேற்கண்ட கிருமி பாதிப்புக்குள்ளானது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 2008லிருந்து ஐந்து ஆண்டு காலமாக மேற்கொள்ளப்பட்ட எச்ஜவி மற்றும் எய்ட்ஸ் உயிர்க்கொல்லி மீதான ஆய்வொன்றில் இது கூறப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு நோயினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 4,633 ஆக இருந்த வேளையில், 2012ஆம் ஆண்டு இவ்வெண்ணிக்கை 4,799 ஆக உயர்ந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட கால கட்டத்தில் எச்ஜவி மற்றும் எச்ஜவி பாதிப்பினால்



பக்கம் 14

## 170 மாணவர்கள்...

இறந்தோரின் எண்ணிக்கை 1050லிருந்து 2012ஆம் ஆண்டு 702 ஆகக் குறைந்துள்ளது ஓர் ஆறுதலான செய்தி. 2008ஆம் ஆண்டு 28 மாணவர்கள் எச்ஐவினால் பாதித்த வேளையில், 7 மாணவர்கள் எய்ட்ஸ் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தனர். இவ்விரு பாதிப்புக்கும் உள்ளான மாணவர்களின் எண்ணிக்கை 2009ல் 35-6 ஆக உயர்ந்துள்ளது. 2010ஆம் ஆண்டில் 44-8 ஆக இருந்த வேளையில் 2011ஆம் ஆண்டில் 69-15 ஆக உயர்ந்துள்ளது. 2012ஆம் ஆண்டு மட்டும் 170 மாணவர்கள் எச்ஐவினால் பாதிக்கப்பட்டுள்ள வேளையில், 16 மாணவர்கள் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 22 ஆண்டுகளில் எச்ஜவினால் பாதிக்கப்பட 205 மாணவர்களில் 48 பேர் எய்ட்ஸ் நோயினால் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றனர். 2008க்கும் 2012க்கும் இடைப்பட்ட காலத்தில் மொத்தம் 35 மாணவர்கள் எச்ஜவி அல்லது எய்ட்ஸ'ன் தாக்கத்தால் இறந்துள்ளனர்.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 13 வயதுக்கும் 29 வயதுக்கும் உட்பட்டோரில் 4க்கு 1 என்ற விகிதத்தில் எச்ஜவி கிருமியால் பாதிப்புக்குள்ளான அதிர்ச்சித் தகவலை மலேசிய எய்ட்ஸ் கவுன்சலின் நிர்வாக இயக்குநரான ரோஸ்வாதி கனி கூறுகிறார். ஒழுக்கக் கேடான நடத்தையுள்ள மாணவர்கள் முன்வந்து மேற்கண்ட நோய்க்கான பரிசோதனையைச் செய்து கொள்ள வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

பரிசோதனையில் மாணவர்களை நோய் தொற்றியிருப்பதாக கண்டறியப்பட்டால் அரசாங்கம் அவர்களின் சிகிச்சைக்கான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றதோடு, 1993லிருந்து இதுவரை அரசு மொத்தம் 123 கோடி வெள்ளியை இவ்விரு நோய்க்கான நிவாரண சிகிச்சைக்காக செலவிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

Powered by: iSENTIA